ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1825/30 - 2013 අගෝස්තු මස 30 වැනි සිකුරාදා - 2013.08.30

*1825/30 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சிவில் விமான சேவைகள் அமைச்சு

*சிவில் விமானசேவைகள் அதிகார சபை*

**196 ஆவது விமான போக்குவரத்து ஒழுங்குக் கோவையின் கீழ் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் அறிவித்தல்**

உள்ளக தனியார் விமான போக்குவரத்து செயற்பாடுகள் (Domestic, Private Charter Air Service operations) மற்றும் வாடகை செயற்பாட்டு விமான போக்குவரத்து சேவையை (Charter Operations) நாட்டில் முன்னெடுப்பதற்காக சிவில் விமான சேவைச் சட்டம் மற்றும் அதனுடன் இணைந்த கோவைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய விமான செயற்பாட்டுச் சான்றிதழ் மற்றும் வாடகை விமான செயற்பாட்டு அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக ராஜகிரிய, புத்கமுவ வீதி, இல. 100 கொண்ட இடத்தில் அமைந்துள்ள எப்-எயார்வேய்ஸ் கம்பனியால் 2013 யூன் மாதம் 21 ஆந் திகதி விண்ணப்பப்படிவம் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பப்படிவத்துக்கு அமைய வரையறுக்கப்பட்ட எப்-எயார்வேய்ஸ் கம்பனியின் பணிப்பாளர் சபையினர் கீழே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

திரு. ஹேமந்த டீ அல்விஸ்
திரு. சிவந்த டீ சொய்சா
திரு. சமிந்த ஜயசேகர
திருமதி நெலுக்கா டீ அல்விஸ்

அக்கம்பனியின் உத்தேச விமானப் போக்குவரத்து தொடர்பான முழுமையான பொறுப்பு முகாமைத்துவத்திற்கான லெப்டினன் லுசான் பெர்னாந்து வரையறுக்கப்பட்ட எப் - எயார்வேய்ஸ் கம்பனியினால் பெயரிடப்பட்டுள்ளார்.

விண்ணப்பதாரியின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி கொழும்பு - 02, ஹுனுப்பிட்டிய வீதி, இல. 04 எனும் இடத்தில் அமைந்துள்ள சிவில் விமான சேவை அதிகார சபையின் கீழ் மாடியில் உள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் எந்தவொரு கடமை நாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் இதனைப் பார்வையிட முடியும்.

உத்தேச செயற்பாடுகளுக்காகத் தேவையான விமானச் சான்றிதழ் (Air Operator Certificate) மற்றும் வாடகைச் செயற்பாட்டு விமானப் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் (Charter License) ஏனைய சகல அங்கீகாரங்களையும் வழங்குவதற்கு முன்னர் சிவில் விமான சேவைச் சட்டம், விமானப் போக்குவரத்துக் கோவையினைப் போன்று உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகள் (International Standard and Recommended Practices) மற்றும் இந்நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அதனுடன் இணைந்த உள்நாட்டுத் தேவைகளுக்கு அமைய பாதுகாப்பும் நம்பகத் தன்மையும் மிக்க வினைத்திறனுடன் கூடிய விமானப் போக்குவரத்துச் சேவையினை நடாத்துவதற்காக விண்ணப்பதாரர்களின் தகைமைகள் நிலையியற் சபைச் செயற்பாடுகளுக்கு அமைய உரியவாறு பரிந்துரை செய்து இவ்விண்ணப்பத்தினை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டங்கள் 2013, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதியின் பின் என்னால் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன்.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மேற்கூறப்பட்ட வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு குறைந்தது 10 நாட்களுக்கு முன்னர் எந்தவொரு நபருக்கும் மேற்கூறப்பட்ட விண்ணப்பம் தொடர்பில் எழுத்து மூலம் உரிய காரணத்தினை அடிப்படையாகக் கொண்ட விடயங்கள், விமானப் போக்குவரத்துக் கோவைகளுக்கு அமைய எனக்கு அனுப்ப முடியும். உள்ளடக்கப்பட்டுள்ள சகல வெளிப்பாடுகளினதும் உண்மைத் தன்மையினை எழுத்து மூலச் சாட்சியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறான மகஜரை எனக்குச் சமர்ப்பிக்கும் வேளையில் அவரினால் பிரதியினை விண்ணப்பதாரிக்குக் கிடைக்கச் செய்ய வேண்டியதுடன் அவ்வாறு அனுப்பியமைக்கான உறுதியினை உரிய மகஜருடன் இணைத்திருத்தல் வேண்டும்.

எச். எம். சீ. நிமல்சிறி,
சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம்
மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை,
இல. 04, ஹுனுப்பிட்டிய வீதி,
கொழும்பு - 02,
2013, ஓகத்து 30.

9-292

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது